

### குலசேகரப் பெருமாள் அருளிச் செய்த
## பெருமாள் திருமொழி
### பெருமாள் திருமொழி 4

677 * ஊனேறு செல்வத்து * உடற்பிறவி யான் வேண்டேன் *
ஆனேறேழ் வென்றான் * அடிமைத் திறம் அல்லால் **
கூனேறு சங்கம் இடத்தான் தன் * வேங்கடத்து *
கோன் ஏரி வாழும் * குருகாய்ப் பிறப்பேனே

678 ஆனாத செல்வத்து * அரம்பையர்கள் தற்சூழ[7] *
வானாளும் செல்வமும் * மண்ணரசும் யான் வேண்டேன் *
தேனார் பூஞ்சோலைத் * திருவேங்கடச் சுனையில் *
மீனாய்ப் பிறக்கும் * விதி உடையேன்[8] ஆவேனே

679 பின்னிட்ட சடையானும் * பிரமனும் இந்திரனும் *
துன்னிட்டுப் புகல் அரிய * வைகுந்த நீள் வாசல் **
மின்வட்டச் சுடர் ஆழி * வேங்கடக் கோன் தானுமிழும் *
பொன் வட்டில் பிடித்துடனே * புகப் பெறுவேன்[9] ஆவேனே

680 ஒண்பவள வேலை * உலவு தண் பாற்கடலுள் *
கண் துயிலும் மாயோன் * கழலிணைகள் காண்பதற்கு **
பண் பகரும் வண்டினங்கள் * பண் பாடும் வேங்கடத்து *
செண்பகமாய் நிற்கும் * திருவுடையேன்[10] ஆவேனே

681 கம்பமத யானை * கழுத்தகத்தின் மேல் இருந்து *
இன்பமரும் செல்வமும் * இவ்வரசும் யான் வேண்டேன் **
எம்பெருமான் ஈசன் * எழில் வேங்கட மலை மேல் *
தம்பகமாய்[11] நிற்கும் * தவம் உடையேன்[12] ஆவேனே

---

[6] ததைத்து
[7] அரம்பையர் கடற்சூழ
[8] உடையென்
[9] பெறுவென்
[10] திருவுடையென்
[11] தம்பமாய்
[12] உடையென்

682 மின்னனைய நுண்ணிடையார் * உருப்பசியும் மேனகையும் *
அன்னவர் தம் பாடலொடும் * ஆடல் அவை ஆதரியேன் **
தென்னவென வண்டினங்கள் * பண் பாடும் வேங்கடத்துள் *
அன்னனைய பொற்குவடாம் * அருந்தவத்தன்[13] ஆவேனே

683 வானாளும் மாமதி போல் * வெண்குடைக் கீழ் * மன்னவர் தம்
கோனாகி வீற்றிருந்து * கொண்டாடும் செல்வறியேன் **
தேனார் பூஞ்சோலைத் * திருவேங்கட மலை மேல் *
கானாறாய்ப் பாயும் * கருத்துடையேன்[14] ஆவேனே

684 பிறை ஏறு சடையானும் * பிரமனும் இந்திரனும் *
முறையாய பெருவேள்விக் * குறை முடிப்பான் மறையானான் **
வெறியார் தண்சோலைத் * திருவேங்கட மலை மேல் *
நெறியாய்க் கிடக்கும் * நிலை உடையேன்[15] ஆவேனே

685 * செடியாய வல்வினைகள் * தீர்க்கும் திருமாலே! *
நெடியானே! வேங்கடவா! * நின் கோயிலின் வாசல்[16] **
அடியாரும் வானவரும் * அரம்பையரும் கிடந்து இயங்கும் *
படியாய்க் கிடந்து * உன் பவளவாய் காண்பேனே

686 உம்பர் உலகாண்டு * ஒரு குடைக் கீழ் * உருப்பசி தன்
அம்பொற்கலை அல்குல் * பெற்றாலும் ஆதரியேன் **
செம்பவள வாயான் * திருவேங்கடம் என்னும் *
எம்பெருமான் பொன்மலை மேல் * ஏதேனும் ஆவேனே

687 * மன்னிய தண்சாரல் * வடவேங்கடத்தான் தன் *
பொன்னியலும் சேவடிகள் * காண்பான் புரிந்து இறைஞ்சி **
கொன்னவிலும் கூர்வேல் * குலசேகரன் சொன்ன *
பன்னிய நூல் தமிழ் வல்லார் * பாங்காய பத்தர்களே

---

**திருமழிசை ஆழ்வார் அருளிச் செய்த**

## திருச்சந்த விருத்தம்

### திருச்சந்த விருத்தம் 48

799 குன்றில் நின்று வான் இருந்து * நீள் கடல் கிடந்து * மண்
ஒன்று சென்றதொன்றை உண்டு * அதொன்று இடந்து பன்றியாய் **

---

[13] அருந்தவத்தென்
[14] கருத்துடையென்
[15] உடையென்
[16] வாயில்

நன்று சென்ற நாள் அவற்றுள் * நல் உயிர் படைத்து அவர்க்கு *
அன்று தேவமைத்து அளித்த * ஆதி தேவன் அல்லையே?

### திருச்சந்த விருத்தம் 60

811 * செழும் கொழும் பெரும்பனி பொழிந்திட * உயர்ந்த வேய்
விழுந்து உலர்ந்து எழுந்து * விண்புடைக்கும் வேங்கடத்துள் நின்று **
எழுந்திருந்து தேன் பொருந்து * பூம்பொழில் தழைக் கொழும் *
செழுந்தடம் குடந்தையுள் * கிடந்த மாலும் அல்லையே?

### திருச்சந்த விருத்தம் 81

832 கடைந்து பாற்கடல் கிடந்து * கால நேமியைக் கடிந்து[17] *
உடைந்த வாலி தன்தனக்கு[18] * உதவ வந்து இராமனாய் **
மிடைந்த ஏழ் மரங்களும் * அடங்க எய்து வேங்கடம் *
அடைந்த மால பாதமே * அடைந்து நாளும் உய்ம்மினோ

---

## திருப்பாணாழ்வார் அருளிச் செய்த
## அமலனாதி பிரான்

### அமலனாதி பிரான் 1

927 * அமலன் ஆதி பிரான் * அடியார்க்கு என்னை ஆட்படுத்த
விமலன் * விண்ணவர் கோன் * விரையார் பொழில் வேங்கடவன் **
நிமலன் நின்மலன் நீதி வானவன் * நீள் மதிள் அரங்கத்தம்மான் * திருக்
கமல பாதம் வந்து * என் கண்ணினுள்ளன ஒக்கின்றதே[19]

### அமலனாதி பிரான் 3

929 * மந்தி பாய் * வட வேங்கட மாமலை * வானவர்கள்
சந்தி செய்ய நின்றான் * அரங்கத்து அரவினணையான் **
அந்தி போல் நிறத்தாடையும் * அதன் மேல் அயனைப் படைத்ததோர் எழில் *
உந்தி மேலதன்றோ * அடியேன் உள்ளத்து இன்னுயிரே

---